# ஆத்ம ஜோதி



திரு வள்ளுவர்



# ஆத்ம ஜோதி

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்,

சோதி 12 | சார்வரி ஸூ ஆனி மீ 1-ந் உ (13-6-60) | சுடர் 8

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1, | செந்தமிழ் வேதம் | 225 |
| 2. | பெரியார் வாழ்விலே வள்ளுவர் | 226 |
| 3. | குணம் நாடி குற்றத்தை மறக்க | 230 |
| 4. | சுவாமி அபேதானந்தாவின் பொன்மொழிகள் | 232 |
| 5, | பெற்ற தாய் | 233 |
| 6. | சுத்தானந்தரின் கடிதங்கள் | 238 |
| 7. | மெய்யுணர்வு | 240 |
| 8. | பெரியோர்கள் இருவர் சந்தித்தால் என்ன ? | 244 |
| 9. | திருமுறைக் காட்சி [33] | 246 |
| 10 | பாரதத்தின் உயிர் நாடி | 250 |
| 11. | சைவசமய சிந்தாமணி | 254 |
| 12 | கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா | 256 |


## ஆத்ம ஜோதி சந்தா விபரம்.


ஆயுள் சந்தா ரூ. 75-00, வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.

பதிப்பாசிரியர்; நா. முத்தையா,

"ஆத்ம ஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. (சிலோன்.)

# செந்தமிழ் வேதம்!

செந்தமிழ் வேதமடா. — வள்ளுவன்
தந்த திருக்குறள் தான்! — இதைச்
சிந்தை, செயல், மொழியால், — அனுதினம்
வந்தனை செய்திடுவோம்! 1

எந்த மதத்தவரும், — புவியில்
எந்த நிறத்தவரும்,
எந்த மொழியினரும் — தமதாய்
ஏத்தும் பொது மறையாம்! 2

பண்டைத் தமிழுலகம் — வாழ்ந்து
கண்ட பெரு நெறியை, — திகழ்
எண்டிசை யும்முழக்கும் — உயர்
வண்டமிழ்ப் பேரிகையாம்! 3

நோய் நொடி வெந்துயரால் — மனம்
நொந்து மெலிந்தவருக்குக் — குறள்
தாய்தந்தை போல்நெருங்கி — உதவும்
தண்ணருள் நண்பனடா! 4

நெஞ்சின் அலைகளிலே — சிக்கி
நிலை குலைந்தவரை — உடன்
அஞ்சற் கரங்கொடுத்தே — காக்கும்
அறிவுத் தெய்வமடா! 5

அன்புக்குத் தாயகமாம், — பகுத்
தறிவுக் குறைவிடமாம்:
இன்பப் பெருங்கடலாம், — புவி
ஏத்தும் திருக்குறள் தான்! 6

சின்னஞ் சிறு அடியால் — எட்டுத்
திக்கும் அளந்துவிட்டு
இன்னும் வளர்ந்துவரும் — குறளுக்கு
ஈடிணை யெங்குமுண்டோ? 7

தாழ்ந்திடும் சூழ்நிலையில் — சிக்கித்
தத்தளிக் கின்றவர்க்கு — நன்கு
வாழ்ந்திடும் செந்நெறியைக் — காட்டும்
மாசறு தேசிகனும்! 8

வண்ணப் புலவர்பிரான் — திரு
வள்ளுவன் சொல்லமுதை — வாரி
உண்ணப் பழகிவிட்டால், — இந்த
உலகில் துன்பமுண்டோ?

[பரமஹம்ஸ தாசன்]

# பெரியார் வாழ்விலே வள்ளுவர்

[ஆசிரியர்]

திருக்குறள் ஒன்று தோன்றிய பின்புதான் தமிழ் நாட்டையும், தமிழ் மொழியையும், தமிழ் மக்களையும் உலக மக்களால் அறிய முடிந்தது. இது தமிழுக்கும், தமிழருக்கும், தமிழகத்திற்கும் பெருமை அளிப்பதாகும். தமிழன்னை எத்தனையோ பெரும் புலவர்களை யெல்லாம் பெற்றெடுத்தாள். வீட்டோடு வாழ்ந்தவர்கள் சிலர்; வீதிக்கு வந்தவர் ஒருசிலர்; ஊரில் நடமாடித்திரிந்தவர் வேறொரு சிலர்; தேசத்திற்காகப் பிறந்தவர் பிறிதொரு சிலர்: உலகத்திற்காகப் பெற்றெடுத்த குழந்தை ஒன்றே ஒன்றுதான். அதுதான் வள்ளுவக்குழந்தை.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு.

என்று பாரதியார் பகர்கின்றார். வள்ளுவனை உலகினுக்கே தந்தபடியால்தான் தமிழ்த்தாயின் புகழ் வானளாவ உயர்ந்தது.

உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்ற நூல்கள் மூன்று. முதலில் இருப்பது பைபிள், இரண்டாவதாக இருப்பது குரான். அடுத்து மூன்றாவதாக இருப்பது திருக்குறள். முதல் இரண்டும் சமய நூல்கள் என ஒதுக்கப்பட்டு விடுமானால் உலக இலக்கியங்களிலேயே அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்று தலைமை வகிக்கின்ற நூல் திருக்குறள் ஒன்றேயாகும்.

வள்ளுவர் காலத்திற்கு முன்பும் பல பெரியார் வாழ்ந்துள்ளனர். பின்பும் வாழ்ந்துள்ளனர். வாழ்ந்து வருகின்றனர்; வாழ்ந்து வருவர். வள்ளுவருக்குப் பின் வந்தோர் தமது வாழ்க்கையிலே வள்ளுவர் கருத்துக்களைச் சம்பந்தப்படுத்தா விட்டால் தமதுவாழ்வு பூரணமடையாத வாழ்வு என்ற அளவுக்கு வள்ளுவரின் சிறப்பை அறிந்திருந்தனர். வள்ளுவர் கூறிய உண்மைகள் என்றுமுள்ளவை

எனவே வள்ளுவர் குறளிலே எடுத்தாண்ட கருத்துக்கள் வள்ளுவர் காலத்திற்கு முன்பு உள்ள பெரியார் வாழ்விலும் சிலசுவடுகளை உண்டாக்கிவைத்தன. வள்ளுவர் என்றுமுள்ள உண்மைகளுக்குத்தமது சொந்த அநுபவத்திலே சில சுவடுகளை உண்டாக்கினர். வள்ளுவர் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து பிறர் வாழவும் வழிகாட்டியவர். அவர் கூறியன எல்லாம் தமது சொந்த அநுபவங்களிலிருந்து முகிழ்த்தவை.

ஒரு முறை நகைச்சுவைமன்னன் என். எஸ், கிருஷ்ணன் அவர்கள் திருக்குறளில் நகைச்சுவைக்கு இடமிருக்கிறதா என்று ஊடுருவிப் பார்த்தார்களாம். ஒருகுறள் கிடைத்ததாம். அதைக் கண்டதும் ஆனந்தக் கூத்தாடினராம்

"இடுக்கண் வருங்கால் நகுக"

என்பதுதான் அக்குறள். துன்பம் வந்தால் அதனைப்பார்த்துச் சிரியுங்கள் என்கிறார் வள்ளுவர். அத்துன்பத்தைச் சிரிப்பின் மூலமேதான் வெல்லலாம்.

சமண நெறியில் துன்பத்தை அநுபவித்த அப்பர் சுவாமிகள் சைவ நெறியில் இன்பத்தைக் கண்டார்கள். இது மன்னனுக்கும் சமணருக்கும் விருப்பில்லை. அப்பர் சுவாமிகளை நிறுத்தி யானையை இடறச்செய்தார்கள். சிவபிரானில் லயித்த மனமுடைய அப்பர் சுவாமிகள் யானையையும் சிவமாகவேபார்த்துச் சிரித்தார். யானை வலம் வந்து வணங்கிச் சென்றது. இதனைத் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலால் குறிக்கின்றார்.

அண்ணலருந்தவ வேந்த ரானைதம் மேல்வரக் கண்டு
விண்ணவர் தம்பெருமானை விடையுகந்தேறும் பிரானை
சுண்ணவெண் சந்தனச் சாந்து தொடுத்ததிருப்பதிகத்தை
மண்ணுலகுய்ய வெடுத்து மகிழ்வுடனே பாடுகின்றார்.

மதங்கொண்டயானையினுல் துன்பம்நேர்ந்தபோதும் மகிழ்வுடன் பாடுந்திறமை பெற்றிருந்தார் அப்பர் சுவாமிகள்.

பொய்யாமை என்ற அறத்தை மேற்கொண்டவன். அரிச்சந்திரன். சத்தியத்தைக் காப்பாறும் லட்சியத்திற்காகவே

தன் வாழ்வை அர்ப்பணஞ்செய்தவன். அரசியல், மனைவி, மகவு யாவும் இழந்தான். இடுக்கண் வந்தபோதெல்லாம் அதனைப் பார்த்து நகைத்தான். சோதனை கூடிவிட்டது ஈற்றில் சத்தியத்திற்கு அரிச்சந்திரன் என்றபுகழ் கிடைத்தது. சத்தியத் தியத்தை மாத்திரம் கடைப்பிடித்த அரிச்சந்திரனிடம் எல்லா நற்குணங்களும் பொருந்தியிருந்தன. ஒருநற்குணம் மற்ற எல்லா நற்குணங்களையும் தன்னோடு சேர்த்துக் கொள்ளும் தன்மை வாய்ந்தது. இதனையே வள்ளுவர் பெருமான்

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

என்று அருளிச்செய்தார். இக்குறளின் கருத்தே அரிச்சந்திரனுடைய வாழ்விலே புகுந்து வேலை செய்தது.

இயேசு பெருமான் தமது உபதேசத்தில் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு என்றார். மறுகன்னத்தைக்காட்டினால் அடி விழாது என்பதற்கு என்ன அத்தாட்சி உண்டு. அடிவாங்குபவர் பொறுத்திருக்கலாம். ஆனால் அடி கொடுப்பவருக்கு மேலும் துன்பத்தை உண்டாக்குகின்றதே. வள்ளுவர்கூறும் முறைவேறு. கன்னத்தில் அடித்தவனுக்கு, அவனுடைய கையைப் பிடித்து நோவிருக்கிறதா என்று வினவி எண்ணெய்போட்டுத் தடவி விடுமாறுசொல்லுகின்றார்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
தன்னயம் செய்து விடல்.

இதனால் அவனுடைய பகை எண்ணம் மாறி பரிவு உண்டாகிறது. தன் குற்றத்தை உணர்ந்து தன்னைத் திருத்திக் கொள்ளுகிறான்.

கஸ்தூரிபாயிக்குச் சத்திர சிகிச்சை நடை பெற்றது. சத்திரசிகிச்சையினால் உடம்பில் பெலவீனமேற்பட்டது. மாட்டு (சூப்) ரசம் கொடுத்தால்தான் கஸ்தூரிபாய் உயிர் பிழைத்திருக்கக்கூடும் என்பது டாக்டரின் எண்ணம். இதனை காந்தியிடம் கூறினார் டாக்டர். காந்தி கஸ்தூரியிடம் விஷயத்தைக் கூறினார். மாட்டு இரசம் குடித்து இன்னும் சில நாட்கள் உயிர்

வாழ்வதை விடமாட்டுரசம் குடியாமலே இன்றே இறக்கச் சித்தமாயுள்ளேன் என்று மகிழ்வுடன் கூறினார். இச்செய்தி

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

என்ற வள்ளுவரின் குறளுக்கு இலக்கியமாக அமைந்தது. இவ்வண்ணமே வள்ளுவர் பெருமான் பெரியோர் வாழ்விலே புகுந்து பல அநுபவங்களை மக்களுக்கு வழங்கி உள்ளார்.

---

ஆயிரத்து முந்நூற்று முப்பதுங் குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் — போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ மன்னுதமிழ்ப் புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்கலாம்

(நத்தத்தனார்)

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த — நூன்முறையை
வந்திக்க சென்னி; வாய்வாழ்த்துக, நன்னெஞ்சஞ் சிந்திக்க; கேட்க
செவி.

(உக்கிரப்பெருவழுதி)

வையத்துக் காந்திமகான் வாழ்வதனில் வள்ளுவனார் தம்
பொய்யற்ற நூற்குப்பொருள் கண்டான் — செய்யத்தமிழ்ப்
பண்பறிந்த ஆஸ்தானப் பாவலன் ராமலிங்க
நண்பனை வாழ்த்துவோம் நாம்.

(கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை)

# குணம் நாடி குற்றத்தை மறக்க

நாம் ஒன்றைச் செய்கிறோம்; நம்முடன் பலர் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் பல நல்லியல்புகளும் குறைபாடுகளும் இருப்பது இயற்கை. குறைகளே இல்லாமல் எல்லாம் குணங்களாகவே இருந்தால் உலகிற்கு உருவமே இல்லாது போய்விடும். வெள்ளைக் காகிதத்தில் எல்லாம் வெள்ளையாயிருந்தால் சித்திரம் எவ்வாறு தெரியும்? கறுப்பும் வெள்ளையும் நிழலும் ஒளியும் சேர்ந்திருக்கும் பொழுதே நாம் உருவத்தைக் காண்கிறோம். எனவே, குறைபாடுகள் இருப்பதனால் தான் நல்லியல்புகள் நமக்குத் தெரிய வருகின்றன. நல்லியல்பு ஒவ்வொன்றுடனும் குறையொன்று இருக்கவே செய்யும். ஆனால் சில சமயங்களில் குறைகள் எல்லை மீறிப்போவதால், தொல்லை தருகின்றன; எல்லையைக் கடக்காமல் நிழலைப்போல் இருந்துவந்தால், அவற்றினால் நல்லியல்புகள் ஒளிபெற்றுத் திகழும். எனவே, கிரானம் தவறாது குறைபாடுகள் வரம்பை மீறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

நாம் பிறரது குறைகளையே பார்த்துக்கொண்டிருந்தால், பெரிய தவறு செய்தவர்களாவோம். ஏனெனில், குணத்தையோ குறையையோ அளந்து எடைபோட்டு அறிவதற்கு நம்மிடம் தராசு எதுவுமில்லை. எனவே, நம்மிடம் குறையிருப்பதாய்த் தெரிந்தால், அதை அப்படியே ஏற்றுக்கொள்ளவும் பிறர் குறைகளை மறக்கவும் வேண்டும். 'நம் கண்ணுக்கு நன்றாய்த் தெரிகிறது, தாங்களே பார்த்ததாய் நம்மிடம் பிறர் சொல்லுகிறார்கள், அவற்றை எப்படி நம்பாமலிருப்பது?" என்று நீங்கள் கேட்கலாம்.

### உபநிடதங்கள் காட்டும் உயர் வழி

ஒருவர் நம்மிடம் வந்து தம்மிடம் இன்னின்ன குறைகள் இருக்கின்றன என்று சொல்லும் பொழுது நாம் அவற்றில் நம்பிக்கை கொள்ளாமல் அவரது குணங்களிலேயே

நம்பிக்கை கொண்டிருந்தால் நமது ஆற்றல் பெருகும். ஒருவர் தாமே தம் குறைகளை வெளியிடாமல் அவற்றை நம்புவதில் தவறில்லை. நம்புவதனல் அவரது குறைகள் நீங்குவதற்கு உதவியவராவோம். ஆனல் ஒருவர் தம் வாயாலேயே என்னிடம் இன்ன குறையிருக்கிறது என்று சொல்லும் பொழுது, 'ஐயா, உம்மிடம் அது ஒன்றுமில்லை' என்று சொல்லக்கூடியவர்களாய் நாம் இருத்தல் வேண்டும்.

இந்நிலையை அடைவது இக்காலத்திற்கு மிகவும் இன்றியமையாதது. உபநிடதங்கள் நமக்கு வழி சொல்லிக் கொடுக்கின்றன. நாம் உபநிடதங்களிடம் சென்று "நாங்கள் பாவிகள்; எங்களிடம் குறைகளிருக்கின்றன; இவற்றைப் போக்க வேண்டும் இவற்றிலிருந்து வெளியேற ஏ, தாயே! எங்களுக்கு வழி சொல்!" என்று வேண்டிக்கொள்கையில் அவை நீ பாவியாவது, இது வெறும் கற்பனை, பொய்" என்று சொல்லுகின்றன. பிறமத நூல்கள், "நீ பாவி; பாவத்தைப் போக்குவதற்கு இன்னின்ன பிராயச்சித்தம் செய்" என்று சொல்ல, உபநிடதங்களோ, நீ உன்னைப்பற்றி எண்ணிக் கொண்டிருப்பதே தவறு. நீ பாவியல்ல; பிரம்மம்" என்கிறது

மனிதன் முன்னேறுவதற்குப் பெரிதும் உதவும் அற்புதமான வழி இது. நாம் பரஸ்பரம் அன்புடன், நம்பிக்கையுடன் பழக வேண்டும். அவ்வாறு பழகினல், நாம் எவ்வளவோ காரியங்களைச் சாதிக்கலாம்.

— வினோபாஜி



# சுவாமி அபேதானந்தாவின் பொன்மொழிகள்

(1) பகவன் நாம அர்ச்சனையின் போது, அர்ச்சனை செய்யும் பக்தனின் பாப சக்திகளை அழிக்கும் அக்னியென அர்ச்சிக்கும் பொருட்களின் குவியல்உட்புறத்தில் உஷ்ணமாக இருக்கிறது.

(2) ஆண்டவன் நாமத்தை விடாமல் சொல்லி, அதில் கரைந்து, பக்தி மதத்தை வளர்ப்பதுதான்மனிதனின் இலட்சியம்.

(3) சைவம். வைணவம் முதலிய வேற்றுமைகள் யாவும் இறையுணர்ச்சியில் கரைந்து விடும். அதனால் இறையுணர்ச்சியை அடைய பாடுபடுவதுதான் நமது கடமை.

(4) எல்லோரையும் வெற்றி கொள்வதற்கு அன்பைத்தவிர வேறு சிறந்த மார்க்கமில்லை.

(5) தான் மரணமடையப் போகும் நாள், மணி முதலியவற்றை அறிவித்து விட்டு இறத்தலை பக்தன் தற்கொலையாகக் கருதுகிறான்.

(6) பக்தன் சமாதி நிலை அடைய விரும்புவதில்லை. அது அவனுக்கு இனி அடையவேண்டிய ஒரு நிலையாக இல்லை. நடக்கும் பொழுதும், உறங்கும் பொழுதும், பேசும் பொழுதும், உண்ணும் பொழுதும் எப்பொழுதும் சமாதி நிலையிலேயே (இறையுணர்ச்சி) இருக்கிறான் பக்தன்.

(7) பக்தனும் பகவானும் ஒருவரே. அந்த பேரின்பத்தை அனுபவிக்கும் பொருட்டு தன்னை வேறுபடுத்தி வைத்துக் கொள்கிறான்.

# பெற்ற தாய்

கா. பொ. இரத்தினம்
[தலைவர் தமிழ்மறைக் கழகம்]

'அன்பு', 'அருள்', 'அறம்' எனும் இம்மூன்று சொற்களும் தமிழரின் நாகரீகத்தையும் பண்பாட்டையும் எடுத்துக் கூறும் தனிச் சிறப்புமிக்க செந்தமிழ்ச் சொற்களாகும். பல்லாயிர ஆண்டுகள் வாழ்ந்து உள்ளந் திருந்திய தமிழினம் வாழ்வின் உயிர் நிலையை உள்ளவாறுணர்ந்து வாழ்வு வளம் பெறுதற்குரிய பண்புகளை எல்லாம் உள்ளுறுத்தி இந்த மூன்று சொற்களையும் வழங்கினர். மக்கட் குலம் உயர்ந்த வாழ்வை வாழுதற்கு இந்த மூன்று சொற்களுங்குறிக்கும் பண்புகள் இன்றியமையாதன. இம்மூன்று சொற்களும் குறிக்கும் கருத்துக்களை முழுதும் அடக்கிய சொற்களை உலகத்து வேறெம் மொழியிலும் காணல் முடியாது. இச்சொற்களின் கருத்தழுத்தம் மிளிர இவற்றை வேறெம்மொழியிலும் மொழி பெயர்த்தலுஞ் சாலாது.

இம்மூன்றினுள் முதலாவதான அன்பு இந்த உலகத்து மக்களையெல்லாம் ஒருவரோடொருவராகப் பிணைப்பது. அன்பு கொள்வோர் தொடர்பிற்கேற்ப இது பலதிறப்படும், தாய்மை கற்பு, காதல்...முதலியனவாக இது விளங்குகிறது. இவற்றுள் எல்லாம் இவ்வுலகில் முதலிடம் பெற்று விளங்குவது தாயன்பேயாகும். தாயன்பின் சிறப்பைத் தமிழ்மக்கள் நன்குணர்ந்து போற்றினர். அன்பின் எல்லைக்குப் பெற்றதாயையே எடுத்துக்காட்டிப் பாடினர் அடியார்கள்.

தன் மக்கள் எந்நிலையிலிருந்தாலும் அவரிடத்து ஒரு தன்மையான அன்புடையவளாயிருப்பாள் தாய். இதனைப் "பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும் சிறப்பின்பாலால் தாயும் மனந்திரியும்" என்ற அடிகளில் தாயும் என்பதிலுள்ள உம்மையால் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

புலப்படுத்துகிறான். இத்தகைய தனிப்பெருமைவாய்ந்த பெற்ற தாயை — ஈன்றாளைத் திருவள்ளுவர் நான்கு குறள்களில் நம் கண் முன்னே கொணர்ந்து காட்டி அரிய உண்மைகளை விளக்குகிறார்.

பத்துத்திங்கள் சுமந்து மகனைப் பெற்றெடுத்தவுடன் தாய் பெறும் இன்பம் தனியின்பமாகும். இஃது உலகத்திலுள்ள தாய்மாரியாவரும் பெறவிழையும் இன்பமாகும். எனினும் இந்த இன்பத்திலும் அவர்களுக்குமிகுந்த உவகை அளிக்கும் இன்பம் ஒன்றுண்டு. அது தம் மக்களைச் சான்றோர் எனப் போற்றுவதைக் கேட்கும் இன்பமாகும்.

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்சான்றோன் எனக்கேட்டதாய்

தமிழினத்தின் உயர்ந்த குறிக்கோளை இந்தக் குறளில் வள்ளுவர் தீட்டிக் காட்டுகிறார். பட்டம் பதவி பணம் முதலியன வற்றிலும் சான்றாண்மையையே சிறப்பாகத் தமிழ்த் தாய்க் குலம் போற்றிற்று. சான்றோராக — நன்மக்களாகத்தம் மக்கள் விளங்குவதையே ஈன்றாள் விரும்பினள் தாய்க்குலத்தின் இக்குறிக்கோள் தமிழினத்தின் தலை சிறந்த பண்பாட்டை நன்கு விளக்குகிறது.

இவ்வுலகிற் பண்டைக் காலத்திற் சிறப்புற்றோங்கிய மக்களினங்கள் பல. இவற்றுட் சில வியாபாரப் பெருக்கத்தையும், சில பிறநாடுகளை ஆட்சிப் படுத்தலையும், சில கைத்தொழிற் சிறப்பையும் குறிக்கோளாகக் கொண்டன. தமிழ்த் தாய்மார் சான்றாண்மையைக் குறிக்கோளாகக் கொண்டமையாலேயே தமிழினம் இன்றும் வாழ்ந்து வருகின்றது. சான்றாண்மையைக் கைவிடாது இருப்பின் அஃது என்றும் வாழும்.

≫ ≫ ≫

ஐயிருதிங்கள் சுமந்து பெற்றுப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த தம் தாயைத் தமிழ் மக்கள் பொன்னே போற் போற்றுவர். தாயிற்சிறந்த தெய்வம் பிறிதில்லை எனக்

கொண்டாடுவர். இத்தகைய பெற்ற தாயைப் பசியால் வருந்த விடுதலே இந்த உலகத்திலுள்ள பழிபாவங்களில் மிகக் கொடியது என்பது தமிழினம் உருவாக்கிய உயர்ந்த கொள்கைகளில் ஒன்றாகும். எதைத்தான் செய்யாதிருப்பினும் ஈன்றாள் பசியைத்தீர்க்காதிருப்பது கொடுமைகளிலெல்லாம் கொடியது எனத் தமிழினங் கருதிற்று.

இக்கருத்துத் தமிழினம் தாய்க்குலத்துக்கு அளித்த உயர்வை நன்கு புலப்படுத்துகிறது. இந்த மிகப் பெரிய கொடுமையை நீக்குதற்காகத் தீயனவற்றையுஞ் செய்யலாம் எனப் பிற இனத்தவர் கூறுவர். ஆனால், தமிழினத்தின் உயர் கொள்கைகளை விளக்கியது வள்ளுவர் தன்னை ஈன்றாளின் பசியைக் கண்டிரங்கினாலும் அதனைத் தீர்த்தற்கு ஒருவன் சான்றோர்பழிக்கும் தொழிலைச் செய்யக்கூடாது என்று செப்புகிறார்.

"ஈன்றாள் பசிகாண்பானாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

இக்குறள் ஈன்றாளின் பெருமையையும், தமிழரின் பீடுடைக் கொள்கையையும் ஒருங்கே விளக்குகிறது. தம் உயிரினுஞ் சிறப்பாகப் போற்றும் பெற்ற தாயைக் காப்பாற்றுதற்குத்தானும், மக்கள் பாவமும் பழியும் பயக்குஞ் செயல்களைச் செய்தல் கூடாது எனும் வள்ளுவர்தம் இவ்வாய் மொழி, தமிழினம் கொண்டிருந்த உறுதியினை அழுத்தந் திருத்தமாய் எடுத்துரைக்கிறது.

≽ ≽ ≽

பகை பாவம் பழி வறுமை முதலியவற்றைப் பெருக்கி மக்களின் வாழ்வைப் பாழாக்குவன சூதாடலும் கள்ளுண்ணலுமாகும். இவை பலாயிரவாண்டுகளாக மக்கட் சமுதாயத்தைக் கெடுத்துவருகின்றன. இவற்றின் தீமைகளை வள்ளுவரைப் போல உள்ளத்தைப் பிணிக்கும் முறையில் நுட்பமாக எவரும் எடுத்துரைக்கவில்லை எனல் உயர்வு நவிற்சியாகாது. கள்ளுண்டுகளிக்கும் மகனை வெறுப்பாள் எனில், சான்றோர்

அவனை எவ்வாறு பொறுப்பர், சான்றோர் வெறுக்குஞ் செயலை ஈன்றாளுக்கு இனியதாகாத செயலை-ஈன்றாளை மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடைய ஒருவன் செய்யலாமா? "நீ உன்னைப் பொருட்படுத்தாவிடினும் உன் தாயையாகுதல் மதிக்கவேண்டாமா" என்று கூறிக்கள்ளுண்டு களிப்பவனைத் தெருட்டுகிறார் வள்ளுவன்.

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என் மற்றுச்
சான்றோர் முகத்துக் களி."

※ ※ ※

மக்கள் வாழ்விலேதுன்பங்கள் யாவற்றுக்கும் அடிப்படை வறுமையே. வறுமையின் கொடுமையைத் தமிழ்ப் புலவர்கள் மட்டுமன்றிப் பிறமொழிப் புலவர்களும் பலபடியாக விளக்கியுளர். வறுமையிலுங் கொடியது இல்லை என்பதை வறுமையிலும் இன்னாதது வறுமையே என்று வள்ளுவர் தமக்கேயுரிய தனிப் பாணியில் கூறியுளர். மக்களினத்தைவாட்டும் வறுமை உலகத்துப் பூசல்கள் யாவற்றுக்குங் காரணமாயிருக்கிறது. வறுமைக்குரிய காரணங்கள் பல. மக்கள் பலர் சூதாடல் கள்ளுண்டல் முதலிய காரணங்களாலே தம்மை தாமே வறியவர்களாக்குகின்றனர். இவ்வாறு உண்டாகும் வறுமையை அறஞ் சாராத வறுமை, என்கிறார் வள்ளுவர். இந்த வறுமையின் இழிவை மக்கள் உள்ளத்திற் பதியச் செய்தற்கு அவர் இதனுடன் ஈன்ற தாயைத் தொடர்புபடுத்துகிறார். எவ்வித இழிவையும் பொறுக்கும் பெற்றதாயைக் கூட அறஞ்சாராத வறுமை தாய்மைப் பண்பினின்றும் பிறழச் செய்து விடுகிறது. அறஞ்சாராதவறுமை எய்தியவனைப் பெற்றதாய் தன் மகனாகக் கருதாது பிறன் போலக் கருதுவாள் எனில் இவ்வறுமையின் கொடுமையைப் பற்றி மேலுங் கூறல் வேண்டுமோ?

"அறஞ்சாரா நல்குரவு ஈன்ற தாயாலும்
பிறன்போல நோக்கப்படும்."

தாயே தன்மகனைப் பிறன்போலக் கருதுதற்குக் காரணமான அறஞ்சாரா வறுமைக்காளாகாமல் மக்கள் வாழ்ந்தால் சமுதாயவாழ்வு வளம் பெறுமன்றோ!

பெற்றதாயை மகிழ்வித்தல் மக்கள் கடன். பெற்றதாய் தன்மகனைச் சான்றோன் எனப்பிறர் போற்றினால் ஒப்புயர்வற்ற மகிழ்ச்சி அடைவாள். பெற்றதாயின் பசியைத் தீர்த்தற்குத்தானும் ஒருவன் சான்றோர் பழிக்கும் வினையைச் செய்தல் கூடாது, கள்ளுண்டு களித்தலும் அறஞ்சாராத வறுமையெய்தலும் பெற்ற தாயாலும் வெறுக்கப்படுவன. இவ்வுண்மைகளை மக்கள் உள்ளத்தில் நன்கு பதித்தற்கு விரும்பினார் வள்ளுவர். பெற்றதாயிடத்து மக்கள் கொண்ட இயற்கை அன்புவாயிலாக அவர்கள் உள்ளத்தை அவர் அணுகுந்திறன் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது.

---

நான் பெரியோர்கள் கூறிய அறங்களை அழிக்கவரவில்லை, அவற்றை நிறைவேற்றவே வந்துளேன்.

கொலை செய்யற்க என்று கூறினர், பிறரைநியாயமின்றிக் கோபிப்பதும் நிந்திப்பதும் பழிப்பதும் தவறு என்று நான் கூறுசின்றேன்.

நீ கோவிலில் கடவுளை வணங்கச் சென்ற சமயம், உன்மீது உன்சகோதரனுக்குக் குறையுண்டு என்று நீ நினைவுறுவாயாகில், உன்சகோதரனுடன் நட்புக்கொண்ட பின்னரே கடவுளுக்கு வழிபாடு செய்க.

விபசாரம் செய்யற்க என்று கூறினர், ஆனால் பெண்ணை இச்சையுடன் பார்ப்பவனும் இதயத்தில் விபசாரம் செய்பவனே.

# சுத்தானந்தரின் கடிதங்கள்

பசுமலை

அண்ணா வணக்கம்.

நான் இங்கே பரம சந்தோஷத்துடன் இருக்கிறேன். கூட்டுக்கிளி நாட்டுக்கிளியாய் சுதந்தர வானிற் பறக்கிறது. திருப்பரங்கிரி முருகனை, சுதந்திரத்திற்குமேல் சுதந்திரம் பெற்று, முடிவில் சர்வசுதந்திரனும் அனாதிமுத்தனும் சித்தனுமான இறைவனை இரண்டறக் கலந்துபோக வேண்டும் என்ற வரமே கேட்கிறேன். ஆனல் ஒரு மலையருவி கடலைக் கலக்குமுன் எததனையோ, பயிர்களுக்கும் உயிர்களுக்கும் உதவிபுரிகிறதல்லவா? அப்படியே எனது ஜீவநதியும் தியாகப்படுகையில் ஓடி, உலகில் தாகந்தீர அறிவும் திருவும் பொழிந்து அகண்டாகார சிவானந்தக் கடலிற் கலந்துவிடவேணடும். உச்சியில் ஞானம், உள்ளத்தில் அனபு, உடலில் பொதுநலப்பணி இம்மூன்றையும் அணிந்து, நான் பூரணமனிதனுக வேண்டுகிறேன்.

ஒவ்வொரு நிமிஷத்தையும் நான் அளந்து பயன்படுத்திக்கொண்டிருக்கிறேன்; வகுப்பிற்கு வேண்டிய பாடப்புத்தகங்களை எழுதிக்கொண்டே நன்ருக மனதிற் பதியவைத்தேன். இரவும் பகலும் உட்கார்ந்து ஒரு மாதத்தில், பிரின்ஸிபிள்ஸ், ஆர்கனிஸேஷன், டிஸிப்ளின், புரோபல், மோந்தஸாரி, ஆர்ம்ஸ்ட்ராங், ரென், பாக்லி முதலியோர் போதனமுறைகளை யெல்லாம் எழுதிப் பாடக்குறிப்புக்களும் தயாராக்கிவிட்டேன். போதனு சக்தியில் எனக்கு முதல் இடம் தந்துள்ளார்கள். மைக்கேல் தனது மகனுக்கு பி.ஏ. வகுப்பிற்கு நோட்ஸையும், 'ரெடரிக்' நூலையும் எழுதித்தரச் சொன்னர். எனக்கும் ஆங்கில இலக்கியத்தை நன்ருக அறிய இந்த வேலை பயனுனது; பி.ஏ. ஆங்கில சரித்திர பொருளாதாரப் பாடங்களை யெல்லாம் முறையாகப் படித்துவிட்டேன். அதன் பயனுக நான் எந்த விஷயத்தைப் பற்றியும் தெளிவாகக் கல்லூரி மேடையில்

பேசிவருகிறேன். எனது தமிழறிவு இங்கே எல்லாருக்கும் தெரிந்து போனது. சில புலவர்கள் எனது பாடல்களைக் கண்டு மெச்சுகிறார்கள். சில மாணவருக்கு நான் நமது திருமுறை நூல்களையும், கீதை, குறள் முதலிய புனித நூல்களையும் புகட்டி, சன்மார்க்கவழியில் நடக்கச் செய்திருக்கிறேன். இதன் பயனாக அவர்கள் நமது சமயத்தின் பெருமையை அறிந்து, நம்மைத் தூஷிப்பவர்களுக்குச் சரியானபடி பதில் சொல்லி வாயை அடக்குகிறார்கள். பைபிள் வகுப்பில் வினா விடைகள் வெகு சுவாரஸ்யமாக நடக்கின்றன. மிஸ்டர் ஃபென் பைபிளை மெச்சும்போதெல்லாம், நான கீதையிலும் குறளிலும் அதே கருத்தைக் காட்டி மெச்சுகிறேன். எனது நண்பர் ஒருவர் இராமதீர்த்தப் புலி. அவர் வாயைக் கிளப்பி 'ஓம் தத்ஸத்' என்று முடிக்கிவிட்டால் போதும், பைபிள் வகுப்பு வேதாந்த வகுப்பாய்விடும்!

பசுமலைத் திருவிழாவன்று ஏசு சரித்திரம் நடிக்க ஏற்பாடாகியிருக்கிறது; அதில் நானும் நடிக்கிறேன்; பாட்டுப்போட்டு நடிக்கச் சொல்லிக்கொடுக்கிறேன்- எங்கள் பைபிள் வாத்தியார் மிஸ்டர் ஃபென்னின் மனைவியைப் பார்த்தேன். கிறிஸ்துவர் எவ்வளவு சிக்கனமாகவும் பகுத்தறிவுக்குப் பொருத்தமாகவும் கலியாணம் செய்கிறார்கள்! சர்ச்சில் (Church) மணவினை உறுதியாகிறது; பாதிரி ஆசீர்வதிக்கிறார். சுவிசேஷ கீதங்கள் முழங்குகின்றன. நண்பர் வாழ்த்துரைக்கின்றனர். மாலை மாற்றிக் கெட்டி மேளம் கொட்டி ஒரு விருந்தானதும் சதிபதிகள் சேர்ந்து வாழ்கிறார்கள்! இப்படி நாமும் சிக்கனமாகக் கல்யாணம் நடத்த வேண்டும். நான் நம் வேதாகம தருமத்தை நன்றாகப் பயில கிறிஸ்து மதம் எனக்கு வழிகாட்டியது.—அன்பு,



# மெய்யுணர்வு

(ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா)

உலகம் உணர்வுமயம் பதியிலிருந்து பசுக்கள்வரை சங்கிலித் தொடர்புபோல் நீண்டு விரிந்து — நிற்கின்றது உணர்வு. உணர்வின் மாற்றத்திற்குத்தக்க படி உயிர்பல வடிவங்கொள்ளும். உணர்வு இரண்டுவகைப்படும். ஒன்று சிற்றுணர்வு அல்லது பொய்யுணர்வு, மற்றது உள்ளுணர்வாம் மெய்யுணர்வு சிற்றுண்ர்வு, மனம் புத்திகாயங்களுடன் சம்பந்தப்பட்டு புறவாழ்வைத்தூண்டி நிற்கும். மெய்யுணர்வு இதயத்தின் ஆழ்ந்த பகுதியில் மெய்ப்பொருளை ஊடுருவி நின்று அகவாழ்வை உணர்த்தி நிற்கும், அறிவும் உணர்வும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை உணர்வு விரிந்து இறுதியில் எப்பொருளில் கலந்து நிற்குமோ அதில் அறிவும் வளர்ந்து முற்றுப் பெறும். அதாவது சிற்றுணர்வுமாறி மெய்யுணர் வாகுங்கால் சிற்றறிவு மெய்யறிவாக மாறும். புற உணர்வு புறவாழ்வினால் வரும் அற்ப சுகங்களைத் தந்து இறுதியில் துன்பத்திலாழ்த்தி நிறுத்தும். உள்ளுணர்வு அகவாழ்வை உணர்த்தி அகப் பொருள் ஒன்றையே நாடி நின்று அதன் வழிவரும் முடிவில்லாத இறை இன்பத்தை அனுபவிக்கச் செய்யும். மனிதனில் இந்த இரண்டுவித உணர்வுகளும் கலந்து நிற்கின்றன. "சிற்றுணர்வும் மெய்யுணர்வும் கலந்த கலவையின் வடிவமே மனிதன்." மனித உணர்வில் ஒளியும். இருளும், அறிவும் அறிவின்மையுங் கலந்திருக்கும்.

புற உணர்வு மேலோங்கி நிற்குங்கால்—நிலையற்ற குறுகிய இன்பங்களைத் தரும் விஷயாதிகளை நாட்டிச்செல்ல மனம் தூண்டி நிற்கும். உள்ளுணர்வு மேலோங்கி நிற்கும் பொழுது பந்த பாசங்களைக் கடந்த மெய்ப் பொருளின் இன்பத்தை நாடி மனம் உயர்ந்து செல்லும். நிலையற்ற பொருளை

வருந்தியடைவதும் அதன்பின் இழக்க நேரும் போது சினம் கொள்வதும் சினத்தினால் கோபமும் கோபத்தினால் மனங் கலங்கிப் புத்தி தடுமாறுவதும் புத்தித்தடுமாற்றத்தினால் அழிவும் உண்டாவதற்குச் சிற்றுணர்வின் ஆதிக்கமே காரணம். சமூகத்திற் காணும் புன்மையான குணங்களும், கபடமுயற்சிகளால் வரும் அழிவுகளும் புறஉணர்வின் விளைவால் வருவனவே. சிற்றுணர்வுக்குக் கீழ்ப்படிந்து நிற்கும் மனமானது நஞ்சு கலந்து அமைதியும் இன்பமும் காணமுடியாமற் கலங்கி நிற்கும், உலகமனைத்தையும் அடக்கியாள வலிமைபெற்றாலுஞ் சிற்றுணர்வின் வழி நிற்பவன் தன்னில் ஒளியும் இன்பமும் அமைதியுங் காண்பது அரிது. புறஉணர்வுக்குப் பின்னால் சத்தியத்தை நாடிநிற்கும் மெய்யுணர்வின் வழிச் சென்று உட்புருஷனின் தொடர்பால் வரும் அருட் சக்திக்கு நமது வாழ்வைத் திறந்து கொடுத்து நிற்போமாகில் ஒளியும் ஆற்றலும் தன்னறிவும் நிறைந்து கொடுத்து நிற்போமாகில் ஒளியும் ஆற்றலும் தன்னறிவும் நிறைக்க ஒரு பகுதிக்கு நாம் உயர்ந்து சென்று அத்வைத இன்பத்தில் கலந்து நிற்போம்.

அநேக குறைபாடுகள் நிறைந்து குழப்ப நிலையிலும் தீராத் துன்பத்திலும் திரும்பத் திரும்பச் செல்லும் சங்கடநிலை மாற வேண்டுமாகில் சிற்றுணர்வைப்புறக்கணித்து உள்ளுணர்வின் வழி ஊடுருவிச் சென்று உட்புருஷனைக் கண்டு தெளிந்து அவன் ஆணையின் கீழ்ப்படிந்து வினையாற்றுவதைத் தவிர வேறுவழியில்லை. துவேஷமும் வஞ்சனையும் வேற்றுமைகளும் வளர்ந்து அமைதி குறைந்து அழிவின் வரம்பை மோதி நிற்கும் மனிதகுலம் இருளில் நின்று ஒளிக்கும் அறியாமையினின்று அறிவுக்கும் வேற்றுமையினின்று ஒற்றுமைக்கும் சென்று பூரண அமைதியும் அன்பும் இன்பமும் நிறைந்த ஒரு புது உலகைக் காண அருள்வழியை நாடிச் செல்ல வேண்டியிருக்கின்றது.

மனம் புத்தி பிராணன்களில் வீறிட்டு நிற்கும் புன்நெறியை நீக்கி மெய்யுணர்வால் அப்பகுதிகளை நிரப்பி அதனால்

வரும் பக்தி ஞானம் ஆனந்தம் என்ற ஈஸ்வர குணங்களை வாழ்வுடன் சம்பந்தப் படுத்த முடியுமானால் கற்பனையில் இருக்கும் சகல நன்மைகளும் அனுபவத்திற்கு வந்தேதீரும். உள்ளுணர்வு அல்லது "மெய்யுணர்வின் வழியே அருள் வழியாம்." அருள் வழி செல்பவன் அருளாளன். அவன் குறைவற்றிருப்பான். பந்த பாசங்களைத் தரும். சிற்றுணர்வின் முடிச்சறுத்து உள்ளுணர்வின் வழி நடத்துதலுக்கு நெஞ்சந் திறந்து கொடுப்போமாகில் அது நம்மை ஆணவமலங்கள் நிறைந்த துன்பப்பாதையினின்று விலக்கி யெடுத்து அருள் பொழியும் ஒளி பொருந்திய பாதையில் வழிநடத்திச் சென்று இறுதியில் தனது இருப்பாகிய மெய்ப் பொருளில் அழுத்தி நிறுத்தும். சந்நியத்தின் அல்லது அந்தராத்மாவின் உணர்வுக்கு — இசைந்து நின்று அதுவழிவரும் அருட்சக்தி வழி நடத்திச் செல்லும் பொருட்டு நம்மை ஒரு சாதனமாய்க் கருதி நிற்பதே "சும்மா இரு" என்று சான்றோர்களால் கூறப்படுவதின் சாரமாகும்.

கிணற்றுத்தவளையின் பூலோக அறிவுபோலிருக்கும் மனமும் புத்தியும்; தனக்குப் பின்னால் உண்மையின் வழி நிற்கும் மெய்யுணர்வை ஆராய்ந்தறிய இடந்தருவதில்லை. தகுந்த ஆத்ம சாதனங்களால் மெய்யுணர்வு அல்லது கடவுளுணர்வு விருத்தியடைந்து வருங்கால் பலவீனங்களும் படிப்படியாய் விலகி நின்று அருளின்பந் ததும்பிப் பரவத்— தொடங்கும். மெய்யுணர்வு கிளம்பி வருமிடத்தை உட்பார்வையால் உன்னிப் பார்த்து, அறிந்து தெளிந்து அதுவழி மெய்ப்பொருளின் இருப்பை அகமுகமாய்க் கண்டறிவதே "தன்னைத் தானறிதல்" என்ற தன் பொருளாம். மெய்யுணர்வு கிளம்பிப் பரவத் தொடங்குங்கால் உட்பகுதிகள் அனைத்திலும் விளக்க முடியாத அமைதியும் இன்பமும் தூய்மையும் குடிகொள்ளும், மனப்பிராணன்களின் கிளர்ச்சிகள் அடங்கி அமைதிபெறும். மெய்யுணர்வின் "வெளிப்பாட்டை" விழிப்புடனிருந்து கவனித்து வருவோமாகில் பண்பற்ற அஞ்ஞான உணர்வுவிலகி அமைதியும் இன்பமும் நிறைந்த ஒளிமயமான ஒரு தூய சக்தி நம்மில் இயங்கி வந்து

அல்லது வெளிப்பட்டு நின்று சகல துறைகளிலும் அதுதானாக நம்மை வழி. நடத்திச்செல்லுவதைக் கண் கூடாகக் காண லாம்

இது மிகச்சிரமமான காரியமாயிருந்தாலும் முயற்சியால் சாதிக்க முடியாத தொன்றல்ல. ஆர்வத்தோடு தக்க சாதன முறைகளை மேற்கொண்டுழுகினால் நிச்சயம் பயனளிக்கும் ஆத்ம சாதன முறைகளை மேற்கொண்டொழுகினால் நிச்சயம் பயனளிக்கும். ஆத்ம சாதன முறைகள் சகலதும் பொய்யுணர்வையடக்கி மெய்யுணர்வை வெளிப்படுத்தும் பொருட்டே வகுக்கப்பட்டிருக்கின்றன. சிற்றுணர்வாம் பொய்யுணர்வு— மெலிந்து மெய்யுணர்வு தடிப்பேற ராஜஸ, தாமஸ குணங் களின் தன்மை மாறி அகந்தையின் எழுச்சியும் அடங்கி நின்று தெய்வீக குணவிசேஷங்கள் மலர்ந்து நிற்கும். பொய் யுணர்வடங்கி மெய்யுணர்வின் வழி வரும் அருட் பொழிவுக்கு நம்மை முற்றாக அர்ப்பணித்து நிற்போமாகில் பழைய வாசனை களும், இன்னும் கேடுடைய யாவற்றையும் அதுவே விலக்கித் தந்து குறைவற்ற அருளின் பத்தில் நம்மை அணைத்துச்சேர்த் து நிறுத்தும் கேவல புத்தியால் புரியும் படிப்பினாலும் தர்க்க வாதங்களினாலும் பலனில்லை. அவைகள் குழப்பத்தைப்பெருக் கும் தெளிவு காண முடியாது. சாதனையினாலே சாத்தியம் கை வரும். விதிப்படி இதயத்தியானம் பழகிவந்தால் மெய்யுணர்வி ன் வழி தெளிந்து காணும். மெய்யுணர்வின் எழுச்சியாலும் அருள் நிறைந்தஒளியின் பொழிவினாலும் சக்தியும்,ஞானமும் வாழ்வில் படர்ந்து நின்று குறைவற்ற தெய்வீக இன்பத்தை அனுபவிக்க இதயத்தியானத்தை மேல் கொள்வீர்களாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



# பெரியோர்கள் இருவர் சந்தித்தால் என்ன?

(நிர்மலானந்தா).

எல்லாம் வல்ல இறைவன் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளி ஜனகாதியர்களுக்கு உபதேசித்தது என்ன? சின் முத்திரையைத் தான் காட்டினார். அதுபோல் மகாராஷ்டிர தேசத்தில் அவதரித்த பக்த சமர்த்த ராமதாசரிடம் ஒரு சமயம் துறவி ஒருவர் வந்தார். அவர் வேதாந்தி சுவாமி சாந்தானந்தர் என்பவர். ஸ்ரீ ராமதாஸ் சுவாமிஜி தன் இருவிரல்களைச் சுட்டிக் காட்டினார். அதேசமயம் சாந்தானந்த சுவாமிஜி தன் ஒருவிரலைச் சுட்டிக் காட்டினார். இருவரது சம்பாஷணையும் விரல் சைக்கினையுடன் முற்றுப்பெற்றது. அதுசமயம் ஆங்கு குழுமியிருந்த பக்தர்கள் நீங்கள் இருவரும் ஆத்மீக விஷயமாக ஏதாவது பேசுவீர்கள் என எண்ணினோம் என்றியம்பினார். அதற்கு ஸ்ரீ ராமதாசர் நாங்கள் பேசியதை நீங்கள் ஒருவரும் கவனிக்கவில்லை போலும் என மொழிந்தார். ஸ்ரீ சாந்தானந்தஜீ தன் கொள்கையை ஒரு விரலைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் தெளிவுபடுத்தினார். உண்மை ஒன்றுதான். நாமம், நாமி; ஆண்டவன், அடிமை; பக்தன், பகவான்; இவ்விருவரும் பிரிக்கப்பட முடியாதவர்கள். உண்மையில் அவை ஒன்றே. ஆனால் ஒன்று வெளிப்படை. மற்றொன்று மறைந்து நிற்கிறது. நான் துவைதம் என்றேன். அவர் அத்வைதம் என்றார். என் கொள்கையின்படி நான் இரு விரல்களைச் சுட்டிக்காட்டினேன். அவரது அத்வைதக் கொள்கையின்படி ஜீவாத்மனும் பரமாத்மனும் ஒன்றே, வித்தியாசமற்றவை என்பதை எடுத்துரைக்க அவர் ஒரு விரலைக்காட்டினார். இதுவே நாங்கள் பேசியதன் உட்பொருள்.

பல மாமுனிவர்கள் தாங்கள் சந்திக்கையில் இதுபோன்று சமிக்ஞையின் மூலம் தங்களது கருத்தைப் பரிமாறிக் கொள்கின்றனர். சமீபத்தில் பம்பாய் மாகாணத்தில் வஜ்ரேஸ்வரி என்ற ஸ்தலத்தில் அமர்ந்திருக்கும் சித்த

புருஷரான ஸ்ரீ நித்தியானந்த சுவாமிகளை துவாரகமடத்து ஸ்ரீ சங்கராச் சாரியார் காணச் சென்றிருந்தபொழுது இருவரும் ஏதும் பேசிக்கொள்ளவில்லையாம். அதைப்பற்றி நித்தியானந்தரிடம் பின் பக்தர்கள் கேட்டபொழுது, என்ன பேசவேண்டும்? மௌனத்தில்தான் எல்லாம் அடங்கிக் கிடக்கிறதே. எனவே மௌனம் தான் நிறைந்த சம்பாஷணை யாகும் என்றாராம்.

பெரியார் இருவர் சந்திக்கையிலே அவர்கள் எதைப் பற்றி பேச விரும்புகின்றனரோ, அது "வாசாமகோசரம்"— அதாவது வாக்குகளுக்கப்பாற்பட்டது. மேலும் அது அநிர் வசனீயம் — அதாவது விவரிக்க முடியாததுமாகும். வாக்கு களுக்கப்பாற்பட்ட ஒன்றை வாக்குகளுக்குள் கட்டுப்படுத்துவ தெங்ஙனம்? விவரிக்கமுடியாததொன்றை விவரிக்கமுயல்வது சாத்தியமா? எனவே தான் முனிவர்கள் சந்திக்கையில் சந்திக்கையில் மொழியா நிற்கின்றனர்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

---

பொய்யாணை யிடாதே, ஆணைகளைக் கடவுள் முன்னிலையில் இடுக என்று கூறினர். ஆணையிட வேண்டாம். வானத்தின் மீது இட்டால் அதுகட வுளுடைய அரியாசனம். பூமியின் மீது இட்டால் அது அவருடைய பாதபீடம், எருசலேம் மீது இட்டால் அரசருடைய நகரம், உன் தலையின் மீது இட்டால் அதிலுள்ள ஒரு மயிரைக்கூட உன்னால் கறுப்பாக்கவோ வெளுப்பாக்கவோ முடியாது. ஆதலால் உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் உரையுங்கள், வேறுவிதம் உரைப்பதெல்லாம் தீமையே.

# திருமுறைக்காட்சி (33)

(முத்து)

## சிவமணம் பூத்தது

பூவுக்கு மணம் உண்டு. பூவும்மணமும் இருசொற்கள். பொருளால் ஒன்று. பூவினின்று மணத்தைப்பிரிக்க முடியாது. பிரித்தால் பூவும் இல்லை; மணமும் இல்லை. இது இறைவனது சிருஷ்டியில் ஒரு அற்புதம். எத்தனையோ அற்புதங்களைக் கண்டுபிடித்த விஞ்ஞானம், பூ அப்படியே இருக்கப் பூவின் மணத்தைப் பிரித்து எடுக்கும் வல்லமையை இன்னும் பெறவில்லை. இதனைச் செய்யமுடியுமாயின் விஞ்ஞானம் இயற்கையை வென்று முன்னேறுகின்றது எனநாம் கொள்ளலாம். விஞ்ஞானிகளால் செய்யமுடியாத ஒன்றைக் காற்றுச்செய்கிறது. பூவிலுள்ள மணத்தை பூவில் ஒருமாற்றமும் நிகழாதிருக்கவே உலகெல்லாம் பரப்புகின்றது. அதனால் அசுத்த காற்றுச் சுத்தகாற்றாகி அகில உயிர்களுக்கும் வாழ்வு அளிக்கின்றது.

பூவினிற்கந்தம் போலச் சிவமும். சத்தியின் வேறுகாதவர், பூவினிற்கந்தம் இன்ன இடத்தில் உண்டு என்பதில்லை, பூமுழுவதுமே வேறறக் கலந்துள்ளது மணம். அதேபோல் சிவசத்தியும் அகில உலகமும் இரண்டறக்கலந்து நிரம்பியுள்ளது. பூ மணம் வீசுவதற்குப் பூ இருப்பிடமாவது போல சிவமணம் பூப்பதற்கு இருப்பிடமாயுள்ளது சிவனாகும். கந்தம் எங்கும் நிரம்பியுள்ளது. அதனை ஜீவர்கள் அபநுவிக்க வேண்டுமானால் பூவின் மூலமாக அநுபவிக்க முடிகின்றது. சிவமணமும் எங்கும் நிரம்பியுள்ளது. அதனைக்கண்ணால் காணமுடிவதில்லை; பிறருக்குக் காட்டமுடிவதில்லை. அதனை அநுபவிப்பதற்கு நிலைக்களனாய் உள்ளது ஜீவன். அநுபவிக்கும் பொருளும் அநுபவிக்கப்படும் பொருளும் அதுவாகவே மாறிவிடுகின்றன. பூவும் மணமும் சொல்லளவில் தம்மை இரண்டாகக் கருதியிருக்கின்ற தன்மைபோல ஜீவனும்

சிவத்தை அடையும் வரை தன்னைச்சிவத்தின் வேருகவே கருதுகின்றது. சாக்கடைத் தண்ணீர் கடலைச்சார்ந்து விட்டால் அதனைப்பின்பு யாரும சாக்கடைத் தண்ணீர் என்று கூறிக்கொள்வதில்லை. அதனைத்தீர்த்தம் என்றே கூறுவர். இதேபோன்று சீவனும் சிவத்தை அடைந்துவிட்டால் சிவமய மாகவே ஆகிவிடுகின்றது. எல்லாம் சிவமயும். எங்குஞ் சிவமயம். சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கும் போதுதான் எல்லாஞ்சிவமயம்; எங்கும் சிவமயமாகின்றது, பூவினிற்கந்தம் காற்றுமூலம் எங்கும் பரவு வதுபோல சீவனுக்குள்ளே பூத்த சிவமணம் திருவருள்மூலம் எங்கும் பரவுகின்றது.

பூவின்மணத்தை மூக்குள்ளவன் அநுபவிக்கின்றுன். ஜலதோஷம் உள்ளவனுல் அநுபவிக்கமுடிவதில்லை. திருவருள் பெற்றவன் சிவமணத்தை அநுபவிக்கின்றுன். பூவுக்குப் பல பெயருண்டு. அரும்பு, முகை, போது, பூ, அலர் என்பன அப்பெயர்களாகும். எல்லாச்சொற்களும் பூவைக்குறிப்பன ஆனுலும் அவை ஒவ்வொன்றும் பூவின் ஒவ்வொரு பருவத் தைக்குறிப்பனவாகும். பூவின் மிக இளைய பருவத்திற்கு அரும்பு என்று பெயர். அரும்பு சிறிது பருத்தால் முகையா கிறது. விரிவதற்கு முன்பு முகை பருத்திருக்கும் நிலைக்குப் போது என்பர். போதுமலரும் போது பூ ஆகிறது. அடுத்த நாள் மலர் உதிரும்போது அலர் ஆகிறது. அரும்பிலோமுகை யிலோ மணம் இருப்பதில்லை. இருந்தாலும் பூரணத்துவம் இல்லை. மலர்ந்த பூவிலே தான் மணம் பூரணமாக உண்டு. மலரும் பருவத்தில் மணம் எங்கிருந்தோ வந்து சேர்ந்து விடுகின்றது. பருவம்பார்த்தே மணம் பரிமளிக்கிறது. அரும் புடனே, முகையுடனே சேர்ந்துதான் மணம் இருந்தது. ஆனல் மலரின் பக்குவநிலையறிந்தே மணம் பரிமளித்தது. இதே போலச் சீவனுடனே தான் சிவம் உறைகின்றது. சீவனுக்குப் பக்குவம் வரும்போது தான் சிவமணம் கமழ்கின்றது. சீவனு க்குப்பக்குவம் வரும்வரை சிவம் காத்திருக்கின்றது பக்குவநிலை வரும்போது சிவம் தானகவே தேடிவருகின்றது. பக்குவநிலை வரும் வரை சீவனே சிவத்தைத் தேடவேண்டியுள்ளது.

மணிவாசகப் பெருமானாரின் பக்குவ நிலையறிந்து சிவம் தானாகவே குருமூர்த்தமாக எழுந்தருளி வந்தது. குருவாகி ஆட்கொண்டது. அதனால் சீவன், சிவம் ஆனது. "தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கமாமே" என்பது மகான்களின் வாக்காகும். "தெளிந்தார் சிவயோகிகளே மரிப்பார் வெறுங்கர்மிகளே" என்பது வேறொருவரின் அனுபவமாகும். இவற்றைத் திருமூலர்.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது

என்கிறார்.

சிவமணம் சீவனுக்குள்ளே பூப்பதற்குச் சீவன் பலவித சாதனைகளைச் செய்ய வேண்டியுள்ளது. ஞானயோகம் கர்ம யோகம். பக்தியோகம், இராஜயோகம், என்று கூறப் படுகின்ற யோகமார்க்கங்கள் யாவும் சிவனைப் பக்குவப்படுத்திச் சிவத்துடன் சேர்க்க எழுந்தவையே. எல்லாயோகங்களுக்கும் பொதுச்சாதனை ஒன்றுண்டு. அதுதான் மன அடக்கமாகும். மனத்தின் இயல்பான தன்மை அலைதலாகும். காற்றினால் கடல்அலை அலைதல்போல மனமும் சம்ஸ்காரங்களினால் அலைந்து கொண்டே இருக்கிறது. குரங்கு ஒருகொப்பிலிருந்து மறு கொப்பிற்குத்தாவுவது போலமனமும் ஒரு விஷயத்திலிருந்து மறு விஷயத்திற்குத் தாவிக்கொண்டே செல்லுகின்றது. இத்தகையமனத்தை ஓவியம் போல நிறுத்தியவர்களே உண்மை உணர்வைப் பெற்றவர்களாவர் அவர்களே அறிவாளிகள் என்றும், ஞானிகள் என்றும், மகான்கள் என்றும் போற்றப் பெற்றார்கள்.

அருணகிரிநாதப் பெருமான் முருகனிடம் 'ஓவியத்தின் அந்தம் அருள்வாயே' என்று வேண்டுகின்றார். நாவுக்கரசுப் பெருமான்

உயிராவணமிருந்து உற்றுநோக்கி
உள்ளக்கிழியின் உருஎழுதி
உயிராவணம் செய்திட்டு உன்கைத்
தந்தாரோடொட்டிவாழ்தி

என்று குறிப்பிடுகின்றார் உள்ளமாகிற திரையிலே சிவத்தின் உருவத்தைஎழுத வேண்டும். ஒருபொருளை உற்றுநோக்க எம்மை அறியாமலே மூச்சுத்தடைப்படுகிறது. மூச்சு ஒடுங்குவதின் அறிகுறி மனஒடுக்கமாகும். உள்ளமாகிய திரையிலே சிவன் உருவத்தை எழுதிப்பார்க்கப் பார்க்க மனஒருமை ஏற்படுகின்றது. சிவபெருமானே தமது உள்ளத்தில் உமாதேவியாருடைய உருவத்தை எழுதிப்பார்ப்பதாகக் குமரகுருபரசுவாமிகள் குறிப்பிடுகின்றார்கள்.

எறிதரங்கம் உடுக்கும் புவனங்கடந்துநின்ற ஒருவன் திருவுளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே என்பது அப்பகுதியாகும். இதனையே திரு மூலப்பெருந்தகை.

ஓவியம் போல உணர்ந்தறிவாளர்க்கு என்று குறிப்பிடுகின்றார்.

நாவி என்பது புனுகு பூனை. புனுகைக் கொடுப்பதால் அதற்கு அப் பெயர் வந்தது. தோற்றத்தில் பூனையைப் போன்றது. புனுகுபெறவிரும்புவோர் நாவியைப் பிடித்துக் கூட்டில் சோடியாக வளர்ப்பார்கள். கூட்டில் வளர்த்தால் மாத்திரம் போதாது. கூட்டின் நடுவே ஒருதடி நாட்ட வேண்டும் அத்தடியிலேதான் நாவிபுனுகை உரோஞ்சி வீழ்த்தும். தடியில்லாவிட்டால் புனுகுவிழாது. நடுவேநாட்டப் பெறும் தடிநடுதறி என்று சொல்லப் பெறும். நாவியை அணைந்த நடுதறி புனுகைக் கொடுப்பது போலச் சிவத்தை யணைந்த சீவனும் சிவனாகிறது. நடுதறி வேறிடத்தில் இருந்தால் புனுகைப் பெற முடியுமா? நாவிக் கூட்டைச் சேர்ந்த படியினால்தான் நடுதறி புனுகுகொடுக்கும் பொருளாகமாறி விட்டது. சிவத்தை அணைந்த சீவனும் சிவமணம் பெற்று பொலிவுறுகின்றது. அச்சிவமணம் எங்கும் பரிமளிக்கின்றது- திருமூலரின் பாடலை இப்போமுழுவதாகபபடித்துப் பாருங்கள்.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே.

# பாரதத்தின் உயிர் நாடி

( சுவாமி சிவானந்த சரஸ்வதி )

“ கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக, குறள் ”

பாரத நாடு சுதந்திர மடைந்து விட்டதால் இளைஞர்களின் பொறுப்பை மேற்கொண்டுள்ளோர் அனைவர் மீதும் மாபெரும் பொறுப்புடைமை நின்றுலவுகிறது. இன்றைய இளைஞர்களே வருங்காலத் தலைவர்கள் வேதாந்திகள் அரசியல் வாதிகள் விஞ்ஞானிகள் மகாத்மாக்கள். பள்ளிகூடத்திலிருந்து அதிகமதிகம் மகான்களைத் தோற்றுவிக்க அரும்பாடு படவேண்டும் ஆசிரியர்கள். இங்ஙனம் பெரியோர்களைத் தோன்றச் செய்வதனால் உலக வழிகாட்டியாக விளங்கிப் பெரும் புகழெய்திய பாரதம் தனது மறைந்த பெருமையை மீண்டும் பெற்றுத் தலைநிமிர்ந்து நிற்க முடியும்.

சமயச்சார்பற்ற வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுப்பவர்கள் விஷயத்திலும் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் உரிய சமயத்தில் அளிக்கும் அரும் போதனைகள் விவேகத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் பேருதவியாக இருக்கும் (இன்று உலகத்தலைவர்களுள் பலரும் வெகுவாக வேண்டி நிற்பது இதுவே) மேலும் மகாத்மா ஆவதற்கு வழிகோலும் சீரிய போதனைகளைப் புகட்டும் ஆசிரியர்களால் பலர் சிறப்பெய்த முடியும். அப்பொழுது தான் உலகத் தலைவர்களுக்கு இந்தியர்கள் வழிகாட்டியாக விளங்கமுடியும் என்பதுடன் தாங்களும் அவ்வழி நின்று மற்றவர்களையும் அழைத்துச் செல்லமுடியும்.

அரசாங்கத்தினால் உரிய மதக்கல்வி அனுமதிக்கப்படவில்லையானாலும், பரக்க அளவில் அன்றாடப் பாடங்களில் சமய உண்மைகளைப் புகுத்திப் போதனை செய்ய ஒவ்வொரு ஆசிரியரும் முயன்றால் அவர்களால் அரிய பல அற்புதங்களைச் செய்ய

முடியும். நாட்டில் நிலவும் மதத்தோடு அதிகமான பற்றுதலை ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறவில்லை. எல்லாவற்றையும் அன்புடன் ஆதரித்து நிற்கும் கீதை, உபநிடதங்களின் மதத்தையே நான் கருத்தில் கொண்டு பேசுகிறேன். ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் ஆசிரியர் சில நிமிடங்களுக்கு நல்லுபதேசம் செய்யவேண்டும். முடியுமானால் வகுப்புக் காலங்களுக்கு மேலாகப் பிரத்தியேக முறையில் மாணவர்களுக்குக் கீதைகு உபநிடதங்களைக் கற்பிக்கச் சிரத்தை எடுத்துக் கொண்டால் மிகவும் நன்மை பயக்கும் சீரிய ஒழுக்கத்தைக் கொண்ட வாழ்க்கையில் நின்று வாழ்வதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் பயிற்சி அளிக்கப் படவேண்டும் என்பதே எல்லாவற்றையும் விட முக்கியமானது. இவ்வரிய ஒழுக்கத்தோடமைந்த வாழ்க்கையே மாணவர்களை நாளையச் சீரிய பிரஜைகளாக்குவதுடன், நாட்டில் சிறந்த பெரியவர்களாகவும் செய்யும்.

பாரதத்தின் உயிர்நாடி, உபநிடதங்களிலேயே உறைந்து கிடக்கிறது. உபநிடதங்களிலிருந்து வெளிவந்துள்ள உண்மைகள், கடவுளின் நேர்முகமான கூற்றுக்கள்; நித்தியத் தன்மை வாய்ந்தவை; முக்காலத்துக்கும் பொருந்துபவை; அகில உலகத்திற்கும் பொருந்தும் பெருமை வாய்ந்தவை. லட்சக் கணக்கான வருடங்கள் முந்தியிருந்தது போலவே இன்றும் மெய்யாக இருக்கிறது உண்மை; இதே போல லட்சக் கணக்கான வருடங்கள் கழிந்தும் உண்மையாகவே உயர்ந்து நிற்கும் அதுவே உண்மையைச் சோதித்துத் தெரிந்து கொள்ளும் முறை. வார்த்தைகள் மாறலாம், அணுகும் முறைகள் மாற்றமடையலாம்; ஆனால் உண்மையானது சிந்தனை சொல்லுக்கு அதீதமாக உயரிய சத்தியமாகப் பிரகாசிக்கிறது; அதை அனுபவிக்க எப்பொழுதும் மனிதனை அறை கூவி அழைத்து வருகிறது. அதிலே கரைந்து ஒன்றாக அது அவனை ஆர்வத்தோடு வேண்டுகிறது. மேலும் இரண்டல்லாத ஒன்றான பேருண்மையாம், 'சத்'' ஒன்றே என்பதையும், அந்த, நான்! 'நீ,' 'அவன்,' 'அது,' 'இது,' மற்றும் அவித்தையின் போலி சிருஷ்டிகள் அனைத்தும் பொய்யென்பதுடன், ஏமாற்றத் தன்மை உடையவை என்பதையும் நாம் அறிய அது வகை செய்கிறது. உபநிட

தங்களில் உள்ள வேதாந்தக் கருத்துக்கள் பண்டைக் காலத்தில் வாழும் மதமாக இருந்தது. (வெறும் வறட்டுச் சொல்லாக அல்ல!) அதே சக்திதான் இன்றும் இந்தியாவை நிலைநாட்டி வருகிறது. உபநிடத கலாசாரத்தில் பல ஊடுருவல்கள் நிகழ்ந்திருந்தாலும், இந்தியா அதன் உலகசகோதரப் பார்வையையும் உயரிய நோக்கத்தையும், சர்வ சக்தியின் பாலுள்ள நம்பிக்கையையும், இன்றும் கொண்டு விளங்குவதற்குக் காரணம் இந்திய மக்களுள் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒரு பெரும் மகரிஷிவழித் தோன்றியுள்ளதன் பாரம்பரியப் பெருமையைப் பாராட்டி வருகின்றனர் என்பதேயாகும்; மேலும் அந்த ரிஷி முனிவர்களின் இரத்தம் தங்கள் சரீரத்திலுள்ள நரம்புகள் தோறும் பாய்ந்து பாய்ந்து பரவி நிற்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

இம்மாபெரும் முனிவர்களின் அமர ஆத்மன் அவர்களின் தகுதி மிகும் குழந்தைகள் மூலம் திருவதாரம் செய்து உபநிடத மதத்திற்கும் புத்துயிரூட்டியுள்ளது. மிகவும் வலுவாய்ந்த நிலையில் தான் ஒரு உயிரமைப்பு வாழமுடியும். அத்தகைய ஒவ்வொரு உபநிடதப் புத்துணர்வும் அண்டத்தின் ஒற்றுமையை உணருவதற்கான உபநிடதச் செய்திகளின் மறுவெளியீட்டின் தோற்றமாக அமைய நேர்ந்தது.

சமீப காலத்திய சரித்திரத்தில் மற்றெந்த நேரத்தையும் விடதற்பொழுதுதான் உபநிடத ஞானத்தைப் பெருமளவில் பரப்ப மிகவும் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது இருபெரும் போர்களால் அதற்குரிய களம் தயாரிக்கப் பட்டுள்ளது; உலகமெங்கிலும் அமைதியின்மை நிலவுகிறது; தேசிய சர்வதேசியக்குழறல்கள் அவ்வப்பொழுது தோன்றி நிற்கின்றன. இந்தக் குழுறல்கள் அறியாமையின் விளைவான பன்முகப் போரரக்கனின் முன் மனிதனைக் கொண்டுவந்து நிறுத்தி உள்ளது. மனித சமுதாயம் பிளவுபட்டு எதிரும் புதிருமாக நிற்கும் என்பதை அவன் உணர்ந்திருக்கிறான். உரிய அறிவின்றல் மனிதனிலுள்ள கீழான குணங்கள் அகற்றப் படாதவரை தீர்வு காணக் கூடிய விஷயங்களும் பெரும்

பிரச்சனையாகிவிடும் என்பதில் ஐயமில்லை. மிக உயரிய ஞானத்தின் நித்திய ஊற்றான உபநிடதங்களில் தான் உயரிய அறிவைக் காண முடியும்.

ஒன்றுபடுங்கள்! எல்லா ஜீவர்களும் வாசம் செய்யும் மாபெரும் ஒற்றுமையின் உறைவிடமே அந்த ஒரே ஆத்மனே. எல்லாவற்றையும் நேசியுங்கள்!! எல்லாம் ஒரே ஆத்மனின் பல்வேறு தோற்றங்களேயாம். எல்லாத் தளைகளையும் உங்கள் மனதிலிருந்து அகற்றிவிடுங்கள்!! தளைகள் அவித்தையின் மாயா சிருஷ்டிகர்த்தா. அமைதியின்மையினுடையவும் அழிவினுடையவும் ஆக்கியோன்! உபநிடத ஞானத்தின் உயிர் ஜோதியைக் கையிலேந்தி நித்தியானந்தமும் அமரத்துவமும் அமைந்த சாம்ராச்சியத்தை நோக்கி முன்னேறுங்கள்!!

---

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று கூறினர். தீமையை எதிர்க்காதே, வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தைக் காட்டு, வஸ்திரத்தை எடுத்தால் உனது அங்கியையும் கொடு. ஒருமைல் தூரம் வரும்படி கட்டாயப்படுத்தினால் இரண்டுமைல் தூரம் செல்க. உன்னிடம் கேட்பவனுக்குக் கொடு. கடன் வாங்க வருகிறவனிடம் முகங்கோணாதே.

# சைவசமய சிந்தாமணி

ஆக்கியோன் சைவப்புலவர் தேசிகமணி கா. அருணாசல ஆசிரியர்.

விலை 4 - 00 ரூபா.

கிடைக்குமிடம் திரு. த. சதாசிவம் மெத்தை வீட்டுத் தெரு, மட்டக்களப்பு

பலநூல்களைக் கற்று அறிய வேண்டிய விஷயங்களை ஒரே நூலில் கற்று அறியத்தக்கதாக ஆசிரியர் இந்நூலினைத் தொகுத்துள்ளார். இந்நூலுக்கு ஆதாரமாக 58 நூல்கள் அமைந்துள்ளன. பல அரியசமய நூல்களின் சாராம்சமே இந்நூலாக அமைந்துள்ளது. எச்சமயத்தவரும் சைவ சமயத்தைச் சுருக்கமாக அறிய விரும்பினால் இந்நூல் அதற்குப் பேருதவியாக இருக்கும். தற்காலம் ஊசியில் மருந்து ஏற்றுகின்ற காலம். ஆசிரியரும் ஊசியில் மருந்து ஏற்றுவதுபோல சைவசமய உண்மைகளை சுருக்கமும் விளக்கமுமாகக் கூறியுள்ளார். சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல் என்ற அழகுக்கு இலக்கியமாக அமைந்துள்ளது. இந்நூல் சைவ நன்மக்கள் ஒவ்வொருவரது இல்லத்திலும் இருக்கவேண்டியதொரு நூலாகும்.


---

## தூய சிந்தைக் களஞ்சியம்

தற் சோதனை, மனத்தைச் சிக்கிரம் தூய்மைப் படுத்துகியது. வீணே உண்டு திரியும் அறிவற்ற வாழ்விலும் சாவே மேலானது. தன்னுணர்வு பெறத் தேவையான மிக முக்கியமான பொருள் மனத்தூய்மை.

சாதுக்களுடன் செய்யும் ஒரு நிமிட சினேகிதமானது பிறப்பிறப் பென்னும் பெரும் சமுத்திரத்தை தாண்ட ஒரு புணையைத் தயாரிக்கிறது. மனம் ஒப்பிச் செய்யும் பிரார்த்தனை மனிதனுக்கு அடுத்தபடி இன்னது செய்வது என்பதைத் தானே காட்டும் .

ஆத்மீக வழியில் தீவிரமான தேர்ச்சியை விரும்பினால் உன் மனத்தில் எழும் ஒவ்வொரு எண்ணத்தையும் நன்குகவனி.



# இயேசுவின் பொன் மொழிகள்

நண்பனிடம் நேசம்கொள், பகைவனிடம் துவேஷம் கொள் என்றுகூறினர், பகைவர்களை நேசியுங்கள். அடிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். பகைக்கிறவர்கட்கு நன்மை செய்யுங்கள். துன்பப்படுத்துவோர்க்காகக் கடவுள் அருளை வேண்டுங்கள்.

இவ்வாறு செய்தால் நீங்கள் கடவுளுடைய மக்கள் ஆவீர்கள் அவர் நல்லோர் தீயோர் இருவருக்கு பொதுவாகவேசூரியனைப்பிரகாசிக்கவும் மழையைப் பெய்யவும் செய்கிறார்.

நீங்கள் நண்பர்களை மட்டுமே நேசிப்பதானால் அதனால் உண்டாகும் பயன்யாது. அவ்வாறு நடப்பது வெறும் வியாபாரம் தானே ஆதலால் பரலோகத்திலுள்ள உங்கள் பிதா பூரணசற்குணராயிருப்பது போல் நீங்களும் பூரணசற்குணராயிருக்கக் கடவீர்கள்.

# கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா

## அவர்களின் ஐரோப்பியப் பிரயாணம்

இரு ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் அவர்கள் சர்வ மத சரித்திரமகாநாட்டில் பங்குபெறுவதற்காக யப்பான் சென்றிருந்தார்கள். இவ்வாண்டு ஜேர்மனியில் நடைபெறப் போகும் மகாநாட்டில் பங்குபற்றுமாறு ஜேர்மனியிலிருந்து வந்த அன்பர்கள் யப்பானிலேயே அழைப்புக்கொடுத்தார்கள். ஆசிரியர் அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டு 3-7-60 இல் பிரயாணமாகின்றார்கள்.

சர்வமத சரித்திரமகாநாட்டில் தாயுமானவர் வரலாறும் அவரது பாடல்களின் தத்துவமும் என்பதுபற்றி பேசுகின்றார்கள்.

மியூனிக்கிலும் வேறு இடங்களிலும் தமிழர் நாகரிகத்தைப்பற்றியும் பேசுவார்கள்.

20-8-60—28-8-60 வரை ஹம்பேர்க் நகரில் உலகச் சைவ உணவு மகாநாடு நடைபெற இருக்கிறது இது பதினொருவது மகாநாடாகும். இதிலும் ஆசிரியர் அவர்கள் பங்குபற்றுகின்றார்கள்.

சென்ற ஆண்டு உலகசமாதான நொவெல் பரிசு பெற்றவர் வணக்கத்திற்குரிய டொமினிக் பையர் அவர்களாவர். இவர் ஐரோப்பிய காந்தியாகப்போற்றப்படுகின்றார். காந்தியடிகளின்பேரால் பெல்ஜியத்தின் தலைநகரான விறஸ்சலை அடுத்த ஹைற என்னும் ஊரில் சர்வதேச இளைஞர் இல்லம் அமைக்கின்றார். அதன் திறப்புவிழா யூலை மாசத்தில் நடைபெற இருக்கிறது. அதிலும் ஆசிரியர் அவர்கள் பங்குபற்றுகின்றார்கள்.

# ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்க

# வெள்ளிவிழா

## நாமலிகித ஜெபம்

### மே மாதத்தில் கிடைத்த நாமத் தொகை பின்வருமாறு

| | |
|---|---|
| நாவலப்பிட்டி | 590031 |
| கொத்மலி | 20604 |
| றத்தோட்டை | 26661 |
| திரிகோணமலை | 16984 |
| யாழ்ப்பாணம் | 2387 |
| மொத்தம் ... | 656667 |

தங்கள் நாமத் தொகைகளை அனுப்பாதோர் ஜூலை 5ம் தேதிக்குள் ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். மாதம் மாதம் கொப்பிகளையும் கணக்குடன் அனுப்புக. குடும்பமாகவே எழுதுங்கள். கிராமங்கள் பட்டினங்களாகவே ஒன்று சேர்ந்து எழுதுங்கள் நாமஜெபம் ஒன்றே ஆண்டவனை நேருக்கு நேராகத்தரிசிப்பதற்குக் கலியுகத்தில் கைகண்ட மருந்து என்பதை மறவாதீர்கள். நாளொன்றுக்கு அரைமணித்தியாலவீதம் ஒரு குடும்பம் நாமலிகிதஜெபத்தில் பங்குபற்றினால் இரண்டு வருடங்களில் லட்சாதிபதியாகி விடுவீர்கள். லட்சாதிபதி என்றால் பணத்தில் அல்ல பணம் இவ்வுலகத்தில்தான் பயன்படும் மறு உலகத்திற்கு இப்பணம் பயன்படாது. இப்பணம் முழுவதையும் ஆண்டவன் நாமமாக மாற்றினால் அங்குபயன் படும். அங்குலட்சாதிபதியாகவோ கோடீஸ்வரனாகவோ வாழ விரும்பினால் இன்றே நாமலிகித ஜபத்தில் பங்கு பெறுக.

### வெள்ளி விழா நிகழ்ச்சிகள்

ஜூலை மாதத்தில் திரிகோணமலையில் நடை பெறும் ஓகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடை பெறும்.

Registered at the G. P. O. as a News Paper M, L. 59-300

## சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும், சந்தா அனுப்பும் போதும் விலாசமாற்றம் செய்யும்போதும் தங்கள் சந்தா இலக்கங்களைத் தவறாது குறிக்குமாறு வேண்டுகின்றோம். விலாச மாற்றம் செய்வோர் புதய பழைய விலாசங்கள் இரண்டையும் தெளிவாக அனுப்புக ஒரே பெயரில் பலர் இருக்கிறார்கள். அதனால் பிழைகள் நேரவுங்கூடும். இன்றுவரை சந்தா அனுப்பாதோர் உடன் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

இந்தியாவில் உள்ள அன்பர்கள் வழக்கம் போல

R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், சேலம் 2.

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு

இவ்விடமும் அறியத்தருக

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி** (சிலோன்)

---

ஆத்மஜோதி ஆயுள் சந்தா ஆதரவாளர்

1- திரு. ஊ.கோபால கிருஷ்ணன் மலாயா

2- திரு- T. இராஜேஸ்வரன் நாவலப்பிட்டி

3- திரு- கனகரத்தினம் நாவலப்பிட்டி

---

## சர்க்கரை கோல்லி சூரணம்

(DIABETES) என்னும் நீரழிவு, மதுமேகம் சர்க்கரை வியாதிக்கு மிகச் சிறந்த சூரணம்.

நீரில்வருகிற சர்க்கரையைப் போக்கி புளிப்புச்சத்தை குறைத்து கொழுப்பு ரஸனைகள் போவதைத் தடுத்து சப்ததாதுக்களின் தித்திப்பைக் குறைக்கும் அற்புதஔடதம் யாவும் மூலிகையினால் சித்தர்களின் அனுபவ முறைப்படி தயாரிக்கப்பட்டது,

தபால் செலவு உட்பட டின் ஒன்று 6 ரூ 75 ச

இலங்கையில் கிடைக்குமிடம்

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.**

இந்தியாவில் கிடைக்கும் இடம்:-

சம்பு இன்டஸ்ரீஸ் சேலம் 2. (S.I.)

மலாயாவில் கிடைக்குமிடம்;-

மு. கணபதி அன் கம்பெனி

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ.

Printed & Published by Mr. N. Muthiah,
"Athmajothi" Nilayam, Nawalapitiya.
at RAJAH PRESS, Theatre Road, Nawalapitiya. (Ceylon.) 13-6-60